# அத்திக்கடவு - அவிநாசி திட்டப் பணி 99% நிறைவு: அமைச்சர் முத்துசாமி தகவல்



அத்திக்கடவு - அவிநாசி திட்டப்பணிகள் குறித்து, ஈரோடு ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் சு. முத்துசாமி பேசினார். அருகில் மாவட்ட ஆட்சியர் எச்.கிருஷ்ணன் உன்னி.

**ஈரோடு:** அத்திக்கடவு- அவிநாசி திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. வீட்டுவசதித் துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமை வகித்தார். ஆட்சியர் எச்.கிருஷ்ணன் உன்னி முன்னிலை வகித்தார்.

கூட்டத்துக்குப் பின்னர், செய்தியாளர்களிடம் அமைச்சர் கூறியதாவது: அத்திக்கடவு- அவிநாசி திட்டமானது, கோயம் புத்தூர், திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் 32 பொதுப்பணித்துறை ஏரிகள், 42 ஊராட்சி ஒன்றிய ஏரிகள் மற்றும் 971 குளம், குட்டைகளில் நீர் நிரப்பும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், 24,468 ஏக்கர் நிலம் பயன்பெறும். தற்போது 99 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஈரோடு மாவட்டத்தில் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது, என்றார்.

# உச்ச நீதிமன்றத் தீர்ப்பு | தடையின்றி, நிம்மதியோடு ஜல்லிக்கட்டு நடத்துவோம் - மாடுபிடி வீரர்கள் நலச் சங்கம் மகிழ்ச்சி



**மதுரை**: தை பிறக்கும்போது போட்டி நடக்குமா? நடக்காதா? என்ற பதற்றம், ஏக்கம் இனி தேவையில்லை. ஆண்டுதோறும் நிம்மதியோடு தடையின்றி ஜல்லிக்கட்டுப் போட்டிகளை நடத்துவோம் எனக் கூறி மதுரை மாவட்ட ஜல்லிக்கட்டு பேரவை நிர்வாகிகள், மாடுபிடி வீரர்கள், காளை உரிமையாளர்கள் நலச் சங்கத்தினர் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை வரவேற்றுள்ளனர்.

ஜல்லிக்கட்டுக்கு 2006-ம் ஆண்டு முதல் பல்வேறு நீதிமன்றத் தடையும், சட்ட சிக்கல்களும் ஏற்பட்டு வந்தன. 2017-ம் ஆண்டு மீண்டும் தடை விதிக்கப்பட்டபோது அலங்காநல்லூரில் மக்கள், ‘வாடிவாசலை திறக்கும் வரை வீட்டு வாசலை மிதிக்க மாட்டோம்’ என ஜல்லிக்கட்டு தடைக்கு எதிராக குரல் கொடுத்தனர்.

அங்கு தொடங்கிய போராட்டம், கன்னியாகுமரி முதல் மெரினா கடற்கரை வரை பெரிய அளவில் உருவெடுத்தது. உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் சமூக வலைதளங்களில் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தனர். அதனால், தமிழக அரசு சட்டப்பேரவையில் சிறப்புச் சட்டம் இயற்றி ஜல்லிக்கட்டுப் போட்டிகளை நடத்தி வந்தது. இந்தச் சட்டத்துக்கு எதிராகவும், விலங்குகளை மையமாக கொண்ட விளையாட்டுகளுக்கு தடை விதிக்க வேண்டும் என்றும் பீட்டா உள்ளிட்ட அமைப்புகள் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தன.

இந்த வழக்கில், ஜல்லிக்கட்டுக்குத் தடையில்லை என உச்ச நீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கியது. இத்தீர்ப்பை, மதுரை அலங்காநல்லூர், பாலமேடு, அவனியாபுரம் போன்ற இடங்களில் பொதுமக்கள், ஜல்லிக்கட்டு ஆர்வலர்கள், மாடுபிடி வீரர்கள், காளை உரிமையாளர்கள் இனிப்புகள் வழங்கியும், பட்டாசு வெடித்தும் கொண்டாடினர்.

மதுரை தமுக்கம் மைதானத்தில் நடந்த நிகழ்ச்சியில் ஜல்லிக்கட்டு ஆர்வலர்கள், காளைகளுக்கு இனிப்பு வழங்கி மகிழ்ச்சியடைந்தனர்.

தீர்ப்பு குறித்து ஜல்லிக்கட்டுப் பேரவை மாநிலத் தலைவர் பி.ராஜசேகரன் கூறியதாவது: உளப்பூர்வமாக வரவேற்கக் கூடிய இந்தத் தீர்ப்பைத்தான் நாங்கள் மலைபோல் நம்பியிருந்தோம். 5 பேர் கொண்ட நீதிபதிகள் அனைவரும் ஒரே மாதிரி தீர்ப்பு வழங்கியது ஜல்லிக்கட்டுக்கு வெற்றி மேல் வெற்றி வந்ததுபோல் உணர்கிறோம்.

2006 முதல் 2023 வரை நீதிமன்றகளில் தடை போடுவது, நீக்குவது என தை பிறக்கும்போது ஜல்லிக்கட்டு திட்டமிட்டபடி நடக்குமா? நடக்காதா? என்ற பதற்றத்துடனும், ஏக்கத்துடனும் மக்கள் காத்திருப்பார்கள்.

போட்டி அமைப்பாளர்கள் கடைசி வரை அச்சத்துடனே போட்டி ஏற்பாடுகளைச் செய்வார்கள். இனி அந்த மாதிரி நிலைக்கு வாய்ப்பு இல்லை. போட்டியை திருவிழாபோல் ஆண்டுதோறும் உற்சாகமாக நடத்துவோம்.

பாரம்பரியம், கலாச்சாரத்தில் தலையிட முடியாது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. இத்தீர்ப்பு மூலம் சட்டப் போராட்டத்துக்கு முடிவு கிடைத்துள்ளது என்று அவர் கூறினார்.

தமிழ்நாடு ஜல்லிக்கட்டுப் பயிற்சி மைய மாநில தலைவரும், மாடுபிடி வீரர்கள் நலச்சங்க மாநிலத் தலைவருமான முடக்காத்தான் மணி கூறுகையில், ‘‘2006 முதல் ஒவ்வொரு ஆண்டும் ஜல்லிக்கட்டுப் போட்டியை நடத்தி முடிப்பதற்குள் பல்வேறு போராட்டங்களைச் சந்தித்தோம். உச்ச நீதிமன்றம் வழங்கி உள்ள இந்தத் தீர்ப்பு இனி நிம்மதியான, தடையில்லாத ஜல்லிக்கட்டுப் போட்டியை நடத்த உதவியாக இருக்கும்.

இந்தத் தீர்ப்பில் முன்னாள் முதல்வர்கள் ஓ.பன்னீர்செல்வம், பழனிசாமி, தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் பங்கு இருக்கிறது. அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்றார்.

நீதிபதி கே.எம்.ஜோசப் தலைமையிலான அரசியல் சாசன அமர்வு, 2017ஆம் ஆண்டின் விலங்குகள் வதை தடுப்புச் சட்டம் (தமிழ்நாடு திருத்தம்) மற்றும் 2017ஆம் ஆண்டு விலங்குகள் வதை தடுப்பு (ஜல்லிக்கட்டு நடத்துதல்) விதிகளின் செல்லுபடியை உறுதி செய்தது.

“திருத்தச் சட்டம் ஜனாதிபதியின் ஒப்புதலைப் பெற்றுள்ளது.

சட்டம் மற்றும் அதன் விதிகள் பிரிவு 51A (g) மற்றும் (h) ஐ மீறவில்லை என்று நீதிமன்றம் கூறியது, இது "உயிரினங்கள் மீது இரக்கம் காட்டுவது" மற்றும் "விஞ்ஞான உணர்வு, மனிதநேயம் மற்றும் விசாரணை மற்றும் சீர்திருத்தத்தின் உணர்வை வளர்ப்பது" ஆகியவற்றின் அடிப்படைக் கடமையாகும். . "விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பை ஒழுங்கமைக்கும்" அரசின் கடமையை கையாளும் அரசியலமைப்பின் 48 வது பிரிவுக்கும் இந்த சட்டம் "தொடர்புடையது" அல்ல என்று நீதிமன்றம் கூறியது. மேலும், திருத்தப்பட்ட ஜல்லிக்கட்டு சட்டம் வாழ்வு மற்றும்

சமத்துவத்திற்கான அடிப்படை உரிமைகளை புண்படுத்தவில்லை என்று நீதிமன்றம் கூறியது.

# ரூ.33.02 கோடியில் உலகத் தரத்தில் பொருநை அருங்காட்சியகம்: கட்டுமான பணிகளை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்



**திருநெல்வேலி:** தமிழக தொல்லியல் துறை சார்பில் திருநெல்வேலியில் ரூ.33.02 கோடி மதிப்பீட்டில் உலக தரத்தில் பொருநை அருங்காட்சியகம் அமைக்கும் கட்டுமான பணிகளை சென்னையிலிருந்து காணொலி காட்சி வாயிலாக முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

தமிழகத்தின் நாகரிக தொட்டிலாக கருதப்படும் ஆதிச்சநல்லூர், சங்க கால பாண்டியரின் துறைமுகமான கொற்கை, இரும்புக் காலத்தை சேர்ந்த சிவகளை

ஆகிய இடங்களில் கிடைக்கப்பெற்ற தொல்பொருட்களை ஒரே இடத்தில் காட்சிப்படுத்தும் வகையில் இந்த அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்று கடந்த 2021-ம் ஆண்டு செப்டம்பர் 9-ம் தேதி தமிழக சட்டப் பேரவையில் முதல்வர் அறிவித்திருந்தார்.

இதற்காக திருநெல்வேலியில் ரெட்டியார்பட்டி மலைப்பகுதியில் தேசிய நெடுஞ்சாலையையொட்டி அமைந்துள்ள 5.276 ஹெக்டேர் (13.02 ஏக்கர்) நிலப்பரப்பு தேர்வு செய்யப்பட்டிருந்தது. இந்த இடத்தில் அருங்காட்சியக கட்டுமான பணிகளை தமிழக முதல்வர் காணொலி காட்சி வாயிலாக சென்னை தலைமை செயலகத்திலிருந்து தொடங்கி வைத்தார்.

இந்த அருங்காட்சியக வளாகத்தில் கொற்கை, சிவகளை, ஆதிச்சநல்லூர் மற்றும் நிர்வாக கட்டிடம் என 4 முதன்மைப் பிரிவுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளன. முற்றங்கள், நெடுவரிசைகள், தாழ்வாரங்கள் போன்றவற்றுடன் இப்பகுதியின் வட்டார கட்டிட கலை தன்மையை பிரதிபலிக்கும் கட்டமைப்புகள், முகப்புகளில் உள்ளூர் கலை மற்றும் கைவினை திறனின் கூறுகளை பயன்படுத்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அருங்காட்சியகத்தின் மொத்த கட்டிட பரப்பு 54,296 சதுர அடி. அருங்காட்சியக சிற்றுண்டிச்சாலை, கைவினை பொருட்கள் பட்டறை, கழிப்பறைகள், வாகன நிறுத்தும் வசதி, நுழைவு வாயில்கள், சுற்றுச்சுவர்களும் அமைக்கப்படுகிறது. அருங்காட்சியகத்தில் திறந்தவெளி பகுதிகளில் உள்ளூர் தாவர வகைகளை நட்டுவைத்து இயற்கை தோட்டமும் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதையொட்டி அருங்காட்சியகம் அமையவுள்ள ரெட்டியார்பட்டியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழக சட்டப் பேரவை தலைவர் மு. அப்பாவு, அமைச்சர் ராஜ கண்ணப்பன்,திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் கா.ப. கார்த்திகேயன், ஞானதிரவியம் எம்.பி., மு. அப்துல்வகாப் எம்.எல்.ஏ., திருநெல்வேலி மாநகராட்சி மேயர் பி.எம். சரவணன், துணை மேயர் கே.ஆர். ராஜு, மாவட்ட ஊராட்சி தலைவர் வி.எஸ்.ஆர். ஜெகதீஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

EVA STALIN IAS ACADEMY